செ.வெ.எண்: 20 நாள்: 09.09.2016

## பத்திரிகைச் செய்தி

## முன்னாள் படைவீரர் சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டம்

புதுக்கோட்டை மாவட்ட முன்னாள் படைவீரர்களுக்கான சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டம் 22.09.2016 வியாழக் கிழமை அன்று முற்பகல் 11.00 மணியளவில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடத்தப்பட உள்ளது.

எனவே, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்கள்/விதவையர்கள் மற்றும் படைவீரர்களைச் சார்ந்தோர் அவர்களின் குறைகள் குறித்த மனுக்களை அன்றைய தினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் நேரடியாக வழங்கலாம், மனு அளித்திட விரும்பும் முன்னாள் படைவீரர்/விதவையர் அவர்களது கோரிக்கை குறித்த மனுக்களை, இரட்டைப்பிரதிகளில், அடையாள அட்டை நகலுடன் வழங்குதல் வேண்டும்.

இந்த வாய்ப்பினை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளுமாறு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**